2017 ஜனவரி 27]

வாரியத்தின்மூலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

நீச்சல் குளம்

***7095—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டத்தில், ஏற்கெனவே இயங்கி வரும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கத்தில், ஏற்கெனவே இருக்கின்ற நீச்சல் குளத்தை உலகத்தரத்தில், உன்னதமான நிலைக்கு உயர்த்திட மத்திய அரசாங்கத்தின் "விளையாடு பாரதம்" (KHELO INDIA) என்ற திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரை ஏற்கப்பட்டவுடன், நீச்சல் குளத்தை தரமுயர்த்த ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது பணிவான காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மொழிவாரி, சிறுபான்மையின சௌராஷ்ட்ர சமூகத்தைச் சேர்ந்த, சாதாரண தொண்டனாகிய என்னை, கழகத்தின் வட்டக் கழகச் செயலாளராகவும், மாமன்ற உறுப்பினராகவும், சௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், பல பதவிகளை வழங்கி, அழகு பார்த்த மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது விசுவாசத்தையும், நன்றி கலந்த கோடானுகோடி வணக்கங்களையும் இந்த மாபெரும் சபையில் காணிக்கையாக்குகிறேன். மேலும், எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் கழகத்தின், நிரந்தரப் பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது காவல் தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) சின்னம்மா அவர்களை இந்தச் சபையின்முன் தலைவணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில், எனது தொகுதிக்குட்பட்ட மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் சர்வதேச அளவில். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். (குறுக்கீடு) கேளுங்கள்.

திரு. எஸ்.எஸ். சரவணன்: சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் ஒன்றும் கிடையாது. இப்படியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவது அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படமாட்டாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. தமிழ்ச்செல்வன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. தங்க. தமிழ்ச்செல்வன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) Point of Order இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் அனுமதிக்கவில்லை; நீங்கள் உட்காருங்கள். திரு. தங்க. தமிழ்ச்செல்வன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

2017 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சரவணன் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில். தமிழக அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, குறிப்பாக விளையாட்டு வளர்ச்சிக்கென* water sports, *நீர்நிலை விளையாட்டு வளர்ச்சிக்காக சிறந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்றது.*

கடந்த தி.மு.க. ஆட்சியின் இறுதியில் நடந்த National Games–*ல் இந்தியாவிலேயே, தமிழகம் 12–வது இடத்தைப் பெற்றிருந்தது. அதிலிருந்து முன்னேறி, விளையாட்டுத் துறையில் இந்த ஐந்து வருடங்களில், மிகுந்த அளவில் முதலீடு செய்யப்பட்டதன் விளைவாக, சென்ற தேசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகம், மும்மடங்கு முன்னேறி, 52 மெடல்களைப் பெற்று, 7–வது இடத்திற்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய மூன்று நல்ல திட்டங்களான* World Beaters Talent Spotting Scheme *மூலமாக ஆயிரம் இளைஞர்களை அடையாளப்படுத்தி, அவர்களுக்கு* Scholarship *கொடுத்து, அதற்கடுத்த* level–**ல்** Champions Development Scheme (CDS) *என்ற திட்டத்தின்கீழ் 14 வயதிற்குள் இருக்கும் 85 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை* National Games *போட்டிக்காகவும்* Olympics *போட்டிக்காகவும் தயார்படுத்தியிருக்கிறோம். அதில் 85 பேர்களில், 19 பேர்களை உறுப்பினர் திரு. சரவணன் அவர்கள் கேட்ட நீச்சல் போட்டியில் ஈடுபடுத்தி, எந்தப் போட்டியில் தமிழகம் ஒரு மெடல்கூட வாங்கவில்லையோ, அதில் 11 மெடல்களை* National Games–*ல் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–15

அதைப்போல மூன்றாவது தளமான, Elite sportspersons, *தனித்துவம் மிக்க விளையாட்டு வீரர்கள் திட்டத்தின் கீழாக, 11 பேர்கள் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒலிம்பிக்ஸ் தரத்தில் விளையாடக் கூடியவர்கள், அடுத்த ஒலிம்பிக்ஸில் தேர்வாகக்கூடியவர்கள். நீர்நிலைப் போட்டிகளில் இருவர் ஐஸ்வர்யா மற்றும் ஜெயவீணா ஆகிய இரண்டு பேர்களையும் தேர்ந்தெடுத்து வருடத்திற்கு 25 இலட்சம் ரூபாய் அந்தப் பிள்ளைகளுக்குக் கொடுத்து, வரும் ஒலிம்பிக்ஸில் குறைந்தது இரண்டு மெடல்களை தமிழகம் வெற்றி*

பெறுவதற்காக அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்திருக்கிறோம். அதிலே ஓர் அங்கம்தான் உறுப்பினர் திரு. சரவணன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில். மற்றோர் அங்கம், தமிழகத்தில் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிற 30 நீச்சல் குளங்கள். ஏற்கெனவே சென்னையில் 3 மற்றும் 25 மாவட்டங்களில் 25 நீச்சல் குளங்கள் ஆக மொத்தம் 28 இயங்கிக் கொண்டிருக்கின்றன. திருவள்ளூரிலும், விருதுநகரிலும் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று நீச்சல் குளங்களை துவங்கி வைக்கும் நிலையிலே இருக்கின்றன. வெகுவிரைவில் அவை துவக்கி வைக்கப்படும். இந்தியாவில் இருக்கும் 3 சர்வதேச தரமிக்க Aquatic Complex–ல் நமது Velachery Aquatic Complex நீச்சல் குளம் முதன்மை நிலையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே தரத்திற்கு மற்ற 29 நீச்சல் குளங்களையும் தரமுயர்த்துவதற்காக மத்திய அரசாங்கத்தின் 'Khelo India' அதாவது 'விளையாடு பாரதம்' என்ற திட்டத்தின்கீழ் கட்டமைப்பை உருவாக்குவதற்காக பரிந்துரைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. கண்டிப்பாக இந்த வருட இறுதியில், அந்த 30 நீச்சல் குளங்களையும் சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல, மதுரையைப் பொறுத்தவரைக்கும், அனைத்து விளையாட்டுகளையும் உள்ளடக்கிய 3 complex–ஆக டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருப்பெயரைக் கொண்டு, SDAT complex இயங்கி வருகிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். தென்மாவட்டங்களைப் பொறுத்தவரைக்கும் 'Khelo India'–வில் ரூபாய் 100 கோடிக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு விளையாட்டு மைதானம் தரமுயர்த்தப்பட்டு, Velachery complex–ஐவிட, நேரு ஸ்டேடியத்தைவிட சிறந்த ஒரு integrated complex–ஆக செயல்படுத்துவதற்கு இப்போது பரிந்துரைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதற்கான திட்டம் செயல்படுத்தப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]